Regd. No. M. 4593. "KUDI ARASU" 12பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரு. 0-1-6

வருட சந்தா ரு. 5. சனி வெளியீடு.

மலர் 18 } ஈரோடு, 7-4-1945 பங்குனி-மீ 25உ } இதழ் 26

## வெள்ளிக்கிழமை — விளக்குவைத்த நேரம்

"சித்திரபுத்திரன்"

நகை வியாபாரி:— ஐயா, தாங்கள் என்னிடம் காலையில் காசுமாலை வாங்கிவந்தீர்களே அது தங்களுக்குத் தேவையா இல்லையா என்பதைத் தெரிவித்துவிட்டால் அதை வேறு ஒருவர் வேண்டுமென்று சொல்லி மத்தியானமிருந்து கடையில் காத்துக்கொண்டிருக்கிறார், அவருக்காவது கொடுத்துவிடலாம் என்று வந்திருக்கின்றேன். எனக்குப் பணத்துக்கு மிகவும் அவசரமாயிருப்பதால் தயவுசெய்து உடனே தெரிவித்துவிடுங்கள்.

வைதிகர்:—செட்டியாரே, அந்த நகை தேவையில்லை. வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வரும்போது பூனை குறுக்கே போச்சுது, அப்பொழுதே வேண்டியதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். வீட்டில் பெண்டுகள் பார்த்து மிகவும் ஆசைப்பட்டு மாலையிலுள்ள காசை எண்ணிப்பார்த்தார்கள், அதில் 68-காசுகளிருந்தது. எட்டு எண்ணிக்கைக் கொண்டது எதுவும் எங்கள் குடும்பத்திற்கு ஆகிவருவதில்லை. ஆனால் அவர்களும் உடனே கீழே போட்டுவிட்டார்கள். ஆனதினால் அது எங்களுக்கு வேண்டியதில்லை.

ந-வி:—அப்படியானால், தயவுசெய்து கொடுத்துவிடுங்கள். வேறு ஒருவர் காத்துக்கொண்டிருக்கின்றார்.

வை:—ஆஹா, கொடுத்துவிடுவதில் ஆட்சேபணையில்லை, காலமே நேரத்தில் வாருங்கள் கொடுத்துவிடுகின்றேன்.

ந-வி:—அவர் இன்று இராத்திரிக்கு ஊருக்குப் போகின்றவர், ஆனதால் தயவுசெய்து இப்பொழுதே கொடுத்துவிடுங்கள்.

வைதி:—செட்டியாரே, தாங்களென்ன நாஸ்திகராய் இருக்கின்றீர்கள். வெள்ளிக்கிழமை, அதுவும் விளக்குவைத்த நேரம், இந்த சமயத்தில் நிறைந்த வீட்டிலிருந்து பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா? அது லட்சுமி அல்லவா?

ந-வி:—என்ன ஐயா, வியாபாரத்திற்காக பெண்டுகளுக்கு காட்டிவிட்டு கொண்டுவருகிறேன் என்று எடுத்துக்கொண்டுவந்த நகையை வேறு ஒருவர் அவசரமாகக் கேட்கின்றார்கள் என்று வந்து கேட்டால், வெள்ளிக்கிழமை விளக்குவைத்தநேரம் என்கின்றீர்களே இது என்ன ஒழுங்கு, ஊரார் நகைக்கு நாள் என்ன?, நேரமென்ன?, என்பது எனக்கு விளங்கவில்லையே.

வைதி:—(தனக்குள்ளாகவே இந்த இரவு நகையை நாம் ஏன் இந்த மனிதனிடம் வாங்கிவந்தோம் என்று நினைத்துக்கொண்டு) என் புத்தியை விளக்குமாற்றால் புடைக்கவேண்டும். உம்ம கடைக்கு வந்ததே பிசகு, தவிரவும் உம்மிடம் நகையை எடுக்கும்போதே மணி பத்தரை இருக்கும். நல்ல ராகு காலத்தில் எடுத்துவந்தேன். அது எப்படியானாலும் கலகமாய்த்தான் தீரும், எனக்குப் புத்தி வந்தது. இனி இந்த மாதிரி செய்யமாட்டேன். தயவுசெய்து நாளைக்கு வாருங்கள்.

ந-வி:—இது என்ன ஐயா, தமாஷ் செய்கின்றீர்களா என்ன? உங்கள் நகையை யாராவது கேட்டால், நாள் நேரம் எல்லாம் பார்த்துக்கொள்ளுங்கள். ஊரார் நகைக்கு இதையெல்லாம் பார்க்கச்சொல்லி உங்களுக்கெவன் புத்தி சொல்லிக்கொடுத்தான்? அவனைக் கூட்டிக்கொண்டுவாருங்கள், அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கின்றேன், மரியாதையாய் நகையைக்கொடுங்கள் நேரமாகுது.

வைதி:—நீங்கள் "குடி அரசு" பத்திரிகை கட்சியைச் சேர்ந்தவர்களா என்ன? நாளையும் கோளையும் சகுனத்தையும் கேலி செய்கின்றீர்களே, அந்தக் கூட்டத்திற்குத்தான் 'கல்லு இல்லை, பொட்டு இல்லை, மேல் இல்லை, கீழ் இல்லை, கோயில் இல்லை, குளமில்லை, சாஸ்திரமில்லை, புராணமில்லை, பறையனும் பார்ப்பானும் ஒன்று என்ற ஆணவம் பிடித்து நாஸ்திகம் பேசிக்கொண்டு திரிகிறார்கள். நீங்களும் அது போல் பேசுகின்றீர்களே.

ந-வி:—நீரோ ரொம்பவும் ஆஸ்திகராயிருந்துகொள்ளும், அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. மரியாதையாய் நகையைக் கொடுத்துவிடும், பவுன் விலை இறங்கிப்போகின்றது. இன்றைக்கு விற்காவிட்டால் எனக்கு நஷ்டம் வந்துவிடும். வேறொரு ஆசாமியும் மிகவும் ஆசையாய் காத்திருக்கின்றார், இனி தாமதம் செய்யாதீர் இருட்டாகப் போகிறது சீக்கிரம் எடுத்துக்கொண்டுவாரும்.

வைதி:—(வீட்டிற்குள் போய் சம்சாரத்துடன் யோசிக்கின்றார்) என்ன, ஏன் பேசவில்லை?, செட்டியார் காசுமாலை கேட்கின்றார்.

அம்மா:—வெகு நேர்த்தி இன்றைக்கு வெள்ளிக்கிழமை விளக்குவைத்த நேரம் லக்ஷ்மியை வீட்டை விட்டு வெளியில் கொடுக்கலாமா?

புருஷன்:—எல்லாம் நான் சொல்லிப் பார்த்தாய்விட்டது. செட்டியார் ஒரே பிடியாய் இப்போதே கொடுத்தாகவேண்டும் என்று கட்டாயப்படுத்திக்கொண்டு வெளியில் காத்துக்கொண்டிருக்கிறார்.

அம்மா:—(பலமாய் சத்தம்போட்டுக்கொண்டு வெளியில் வருகிறபோது பேசிக்கொண்டுவருவதாவது) செட்டியாருக்குத்தான் புத்தியில்லை, உங்களுக்குமா புத்தியில்லை, அவர் என்ன செட்டியா மட்டியா? வீடு வாசல் வைத்துப் பிழைத்த மனிதனா, நாடோடித் தடிபோக்கியா? நிறைந்த வீட்டில் விளக்கு வைத்த நேரத்தில் கலகம் பண்ண வந்திருக்கிறார். நான்போய் கேட்கிறேன். (என்று வெளியில் வந்து) என்னசெட்டியாரே உமக்குப் புத்தியில்லையா? இப்பொழுதான் ஏதோ கொஞ்சம் ஓஹோ என்று எங்கள் குடும்பம் தலை எடுக்கின்றது. அதற்குள் நீர் எமனாய் வந்துவிட்டீர், கொள்ளையில் போய் விடுவீரா, அல்லது ஏதோ ஒரு மனிதன் நகை வாங்க வந்தவன் காத்திருக்கிறான் என்கிறீரே அவன்தான் கொள்ளையில் போய்விடுவானா? உமக்குத்தான் புத்தியில்லாவிட்டாலும் அவனுக்காவது புத்தியிருக்க வேண்டாமா? வெள்ளிக்கிழமை நகை

யைப் போய் கேட்கச்சொல்லலாமா என்கிற அறிவில்லாமல் உம்மை இங்கே அனுப்பி நகையை பண்ணச்சொல்லி இருக்கிறானே, அத்தனை அவசரம் என்ன அவனைக் கொண்டுபோகிறது?

(இந்தச்சமயத்தில் மகன் வந்துவிட்டான்)

மகன்:—என்ன அம்மா கூச்சல் போடுகிறாய்? இவர் யார்?

தாயார்:—இவரா? இவர் ஒரு நகை வியாபாரியாம். இவர் தலையில் நெருப்பைக்கொட்ட! வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் காசிமாலையைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டுமாம். நகைக்கி நிற்கிறார்.

மகன்:—அதெல்லாம் இருக்கட்டும் ஜாஸ்தி பேசாதே! நமக்குக் காசிமாலையேது? நம் வீட்டில் காசிமாலை இல்லையே, நேற்றுத்தானே அப்பா ஒரு காசிமாலை வாங்கவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார். அதற்குள்ளாகவா வாங்கி ஆய்விட்டது காசிமாலை?

தாயார்:—உங்கப்பா யார் முகத்தில் முழித்தாரோ, இன்றுகாலையில் கடைக்குப்போனார், இந்த செட்டியாரிடம் மாலை ஒன்று இருந்தது, அதை எனக்குக் காட்டுவதற்காக வாங்கிவந்தார். நேற்று நினைக்கும்போதே ராகுகாலம், இன்று செட்டியார் கடையில் நகை வாங்கும்போதும் ராகுகாலம், வழியில் வரும்போதும் பூனை குறுக்கே போச்சுதாம்; அப்பொழுதே உங்கப்பா வேண்டாமென்று தலைசுத்தி யெறிந்து விட்டு வா வேண்டாமா? அப்படிச் செய்யாமல் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். அது கொஞ்சம் நன்றாய் இருந்தது. நானும் ஆசைப்பட்டு வாங்கலாம் என்று முடிவுகட்டி எண்ணிப்பார்த்தேன், காசு அறுபத்திஎட்டாயிருந்தது, உடனே தலையைச் சுற்றி எறிந்து விட்டேன். உங்கப்பா பெட்டியில் வைத்துவிட்டார். இப்ப வந்து செட்டியார் அவசரப்படுகிறார்; யாரோ வேறே கிராக்கி காத்துக் கொண்டிருக்கின்றதாம்; வெள்ளிக் கிழமை, விளக்கு வைத்த நேரம், முதலாவது பெட்டியைத் திறக்கலாமா? நீயே சொல்லு பார்ப்போம்.

மகன்:—ஐயய்யோ! இதென்ன பெரிய அழுக்கு மூட்டையாயிருக்கிறது. குருட்டு நம்பிக்கைப் பிடுங்கலாயிருக்கின்றது; வெள்ளியாவது, சனியாவது, ராகாவது, கேதாவது! ஊரார் வீட்டு நகையை வாங்கிக்கொண்டுவந்து பெட்டியில்வைத்து பூட்டிக்கொண்டு வெள்ளியுஞ் சனியும் பேசுவது வெகு ஒழுங்காய் இருக்கின்றது. பேசாமல் எடுத்துக் கொண்டுவந்து கொடுத்துவிடு; இல்லாவிட்டால் பெட்டியை உடைத்து விடுவேன் தெரியுமா?

அதற்குள் அப்பா வந்துவிட்டார்.

அப்பா:—என்னடா பயலே, பலே அதிகப்பிரசங்கியாய்ப் போய்விட்டே. நான் அப்போதே உன்னை "குடி அரசு" பத்திரிகையைப் படிக்கவேண்டாம், கெட்டுப்போவாய் என்று சொன்னேனா இல்லையா? அதுபோலவே படித்து கெட்டுக் குட்டிச்சுவராய் போய்விட்டாயல்லவா? கர்மம்! கர்மம்!! இந்த இழவு பத்திரிகை ஒன்று முளைத்து ஊரிலுள்ள சிறு பிள்ளைகளையெல்லாம் நாஸ்திகமாக்கிவிட்டது.

மகன்.—"வெகு நன்றாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு உடனே அம்மாள் இடுப்பில் சொருகியிருந்த சாவியை பிடுங்கிக்கொண்டு போய் பெட்டியைத் திறந்து நகையை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்து செட்டியாரை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான்.

பிறகு புருஷனும் பெண்ஜாதியும் ராகுகாலத்தில் அந்த செட்டிஇடம் நகை வாங்கிவந்ததே பிசகான காரியம். இதுவும் வரும் இன்னமும் எவ்வளவோ கெடுதியும் வரும். என்னை அடிக்கவேண்டும்...............லே என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

# திராவிடக்கழகங்கள்

5-3-45-ந் தேதி நடுக்கொண்டையம்பேட்டை திராவிடக் கழகப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் கோட்டை வீரன் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். சிவலிங்கன் அவர்கள் சொற்பொழிவாற்றினார். ஷை சங்கத்தின் சார்பாக புதிதாக கட்டப்படும் வாசகசாலைக்கு நாகம்மையார் வாசகசாலை என்று பெயர் வைப்பதென்றும், தோழர் சா. மா. கி. ராமசிவம் அவர்களைக் கொண்டு ஏப்ரல் மாதம் இக்கழகத்தின் வருட பூர்த்தி விழா நடத்துவதென்றும், 'குடிஅரசு' பத்திரிகையை 4-4-45-ந் தேதி முதல் வருட சந்தாவாக பணம் கட்டி வரவழைப்பதென்றும், தோழர் சி. டி. நாயகம் அவர்கள் இறந்ததற்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்வதாயும், ஷை சங்க சார்பில் கமலா அல்லது கைம்பெண் என்ற சீர்திருத்த நாடகத்தை நடத்துவதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

* *

கள்ளிகுளம் திராவிடர் கழகம் ஆரம்ப விழா 25-3-45-ல் கள்ளிகுளம் கூட்டுறவு சங்கக் கட்டிடத்தில் கூட்டுறவு சங்கத் தலைவர் தோழர் பா. கு. அந்தோனிமுத்து நாடார் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: எஸ். வி. டேவீஸ், உபதலைவர்: இ. துரைசாமி நாடார், காரியதரிசி: பி. எம். ஜெயசிங், கூட்டுக் காரியதரிசி: அ. சேக்முகம்மது, பொக்கிஷதார்: பா. கு. அந்தோனிமுத்து நாடார். சங்கத்திற்குத் தோழர்கள் இ. துரைசாமி நாடார் 5 ரூபாயும், எஸ். வி. டேவீஸ் 1 ரூபாயும், பா. கு. அந்தோனிமுத்து நாடார் 1 ரூபாயும் நன்கொடை கொடுத்தார்கள்.

* *

செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்) திராவிடர் கழகத் திறப்புவிழா 17-3-45 சனியன்று செங்கற்பட்டு மாவட்ட கழகத் தலைவர் தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் தோழர் மயிலை சிவமுத்து குமாரசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அவ்வமயம் தோழர் அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

* *

20-3-45-ந் தேதி பொன்மலை திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் தோழர் எஸ். நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருச்சித் தோழர் எ.கே. பாட்சா சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்டதைப் பாராட்டி ஒரு தேநீர் விருந்தும் மணமகனுக்கு வாழ்த்துப் பத்திரமும் அளிக்கப்பட்டது.

ஷை கமிட்டி அங்கத்தினர் தோழர் எஸ். கிருஷ்ணன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

* *

பட்டணத்தில் 23-2-45-ல் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் தோழர்கள் சி. பி. சின்னராசு, பொன்னுசாமி, ஆர். எஸ். அங்கமுத்து ஆகியோர் பேசினர்.

* *

சென்னை தண்டையார்ப்பேட்டை திராவிடர் கழகப் பொதுக் கூட்டம் 25-2-45 தோழர் சி. பார்த்தசாரதி நாயகரவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். தவமணி இராசன், குமாரசாமி, என். ஜீவரத்தினம், ஏ. பி. ஜனார்த்தனம் பி. ஏ., ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

கோவை ஜில்லா, குனியமுத்தூர் தேவேந்திர வாலிபர் சங்கத்தை திராவிடர் கழகமென 4-2-45-ல் மாற்றியமைக்கப்பட்டது. தோழர் ஜே. எஸ். கண்ணப்பர் தலைமை வகித்தார். தோழர்கள் ஆர். நெடுஞ்செழியன், பி. ராமசாமி ஆகியோர் பேசினர். தோழர் கே. ராமு வந்தனங்கூறக் கூட்டம் முடிவுற்றது.

* *

செங்கம் திராவிடர் கழக ஆண்டுவிழா 2-3-45-ந் தேதி தோழர் முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. அன்னியூர் தோழர்கள் முருகன், ஜோசப், சுப்ரமண்யம் முதலியவர்கள் பேசினார்கள்.

* *

29-3-45ல் தோழர் ஈ. பொன்னுசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட ஒரு திராவிடர் கழகம் அம்மாபாளையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

# சென்னை மாவட்ட 14-வது திராவிட (ஜஸ்டிஸ்) மாநாடு

## நடவடிக்கை விபரம்

சென்னை மாவட்ட 14-வது திராவிட (ஜஸ்டிஸ்) மாநாடு 1-4-45ந் தேதி காலை சென்னை செயின்ட்மேரிஸ் ஹாலில் திருச்சி நகரசபை உறுப்பினரும், திருச்சி மாவட்ட திராவிடர் கழகத் தலைவருமான தோழர் என். சங்கரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்து 3000 பிரதிநிதிகளுக்கு மேல் வந்திருந்தனர். மாநாட்டின் கொடியையேற்றுவித்த தோழர் போளூர் சுப்ரமணியம், மாநாட்டைத் திறந்து வைத்த பழையகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன், தோழர் என். சங்கரன் ஆகியவர்களுக்குச் சென்னை நகர திராவிட கழகத்தின் சார்பாக வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன.

தோழர் போளூர் சுப்ரமண்யம் அவர்கள் கொடியேற்றிவைக்கையில், சேலம் மாநாட்டுக்குப் பின் முதல் தடவையாக சென்னையில் நடைபெறும் மாநாடு இதுதான் என்றும், சேலம் மாநாட்டிலிருந்து கட்சி இளைஞர்கள் கைக்கு வந்துவிட்டதென்றும், இளைஞர்கள் கட்சியைப் பலப்படுத்தத் தங்களால் ஆனதைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, கட்சிக் கொடி எதற்கு அச்சேர்க்கத்திற்காகக் கடந்த இருதலை முறையாகப் பாடுபட்டு வருகிறதென்று விளக்கிவிட்டு கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் தராசு சரியான குறியாகாதென்றும், அடுத்து நடைபெறும் மாகாண மாநாட்டில் இதுபற்றி யோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படும் என்றும் கூறினார்.

### தோழர் என். அர்ச்சுனன் சொற்பொழிவு

பழையகோட்டை இளைய குமார பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்களின் திறப்பு விழா சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

"திராவிடர்களாகிய நாம் நிலை முற்காலில் எந்நிலையிலிருந்தது? இன்று எந்நிலையிலிருக்கிறது என்பதைச் சற்று எண்ணிப் பாருங்கள்.

திராவிடர் நாகரீகம் அந்நாளில் பாரெங்கும் பரவியிருந்ததையும் இதற்கு சரித்திரம் சாட்சியளிப்பதையும், கல்வெட்டுகள், சாசனங்கள், புதை பொருள்கள் காட்சியளிப்பதையும் நீங்கள் காணவில்லையா?

இவ்வாறு அன்று சிறப்புற்று விளங்கிய நாம் இன்று எந்நிலையிலிருக்கிறோம்? நம்மைப்போல் சிறந்து விளங்கிய நாடுகள் இன்று எந்நிலையிலிருக்கின்றன? அவைகள் இன்றும் தமது பூர்வீக நாகரீகத்தோடு அழியாது விளங்கவில்லையா? இன்றும் இப்போர் எதற்காக நடக்கிறது? தங்கள், தங்கள் கலை, நாகரீகம் மொழி முதலியவைகள் அழிக்கப்படாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவன்றோ? அப்படியிருக்க, திராவிடர்களாகிய நாம், நமது கலை, மொழி, நாகரீகம் முதலியவைகளை இழந்து இவ்வாறு அடிமையாய் இருப்பதேன்? இவ்விழி நிலையைக் கண்டு இன்றும் நமவர்களுக்கு விழிப்பு ஏற்படவில்லை என்பதை பற்றி எம்போன்ற வாலிபர்கள் வெட்கப்படாமல் இருக்கமுடியுமா?

நம் தலைவர் பெரியார் அவர்கள் தமது தள்ளாத வயதிலும் உடல் நலிவுற்று இருந்தும் நம் மக்கள் நிலையைக் கண்டு இரங்கி கிராமம் கிராமமாகவும், நாடுநாடாகவும் சுற்றித் திரிந்து காலை மாலை, நடு இரவு என்று பாராமல் தட்டி எழுப்பி வருகிறார். இன்னும் நம் மக்களுக்கு உணர்வு பிறக்கவில்லை. பெரியாரின் உயிருள்ள காலத்திற்குள் நம் மக்கள் விழிப்படையவில்லையானால் இனி என்று விழிப்படைய முடியும்? ஆகவே, இப்பொழுதே, நாமும் பெரியாருடன் ஒத்துழைந்து நமது இழி நிலையைப் போக்க பாடுபடுவோமாக. இதுதான் எனது பெரும் ஆசை.

### இந்நிலைக்குக் காரணம் என்ன?

அடுத்தபடியாக, நம் நாடும், நாமும் இந்நிலையில் இருப்பதற்கு என்ன காரணம்? நம்நாடு அந்நியர்களால் அடக்கி ஆளப்படுவதற்கும், வறுமையில் ஆழ்ந்து கிடப்பதற்கும் அடிக்கடி அன்னியர் படையெடுப்புகள் ஏற்பட்டதற்கும், உலகத்தில் மிகப் பின்னணியிலிருந்து வருவதற்கும், வெகுகாலமாய் காரணமாகயிருந்து வருகிற காரணம் என்ன? மத சம்பந்தமாயுள்ள ஆயிரக்கணக்கான குருட்டு நம்பிக்கைகளும் சமூக வாழ்வில் உள்ள சற்றும் மனிதத்தன்மைக்குப் பொருந்தாத மூடப்பழக்க வழக்கங்களையுடைய ஸ்தாபனங்களும் ஆகிய யோக்கியப் பொறுப்பற்ற தன்மைகள்தான் என்பதை யாராலும் மறக்க முடியுமா என்று கேட்கின்றேன்.

இவைகள் அடியோடு ஒழிக்கப்படாமல் நாம் மற்ற நாட்டார்கள் முன்னிலையில் தாழ்த்தப்படாமலும் இழிவு படுத்தாமலும் இருக்க என்றாவது முடியுமா?

புரோகித ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டும் ஜாதி உயர்வு தாழ்வு கொள்கைக்கு உட்பட்டும் மற்றும் மூட நம்பிக்கையுள்ள மக்களால் நடத்தப்பட்டுவரும் மதச் சடங்குகளை ஏற்றுக்கொண்டு மக்களில் ஒரு வகுப்பார் கோவிலுக்குப் போனால், கோவிலும் கடவுளும் தீட்டாகிவிடும் என்கின்ற கோவிலையும் கடவுளையும் வணங்கிக்கொண்டு இருக்கும் மட்டும் நமக்கு அரசியல் சுதந்திரம் (சுயராஜ்யம்) கிடைத்தாலும் நாம் சுயமரியாதையுடன் சமத்துவத்துடன், வாழும் மக்களாக கருதப்படுவோமா என்று கேட்கிறேன். மேற்று நாட்டார் நம்மை சமத்துவமாக சரிநிகராக மதிப்பார்களா என்று கேட்கிறேன்.

ஆகவே, நாம் தன்மானத்துடன் வாழ வேண்டுமானால், மனிதனாக வாழவேண்டுமானால் முதலில் அயோக்கியத்தனமும் சுயநலமும் கொண்ட மதசூழ்ச்சிகளை உடைத்தெறிய வேண்டும். இதைத்தான் நம் பெரியார் அவர்கள் சென்றவிடங்களில் எல்லாம்

முழங்கிக்கொண்டு வருகிறார்கள். வாலிபர்களாவது இத்துறையில் முன்வரவேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன்.

நமது திராவிடர் (ஜஸ்டிஸ்) கழகம் தென்னாட்டில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டதாகும். முதலில் காங்கரஸ் என்ற பெயரால், பார்ப்பனர்கள் பதவிகளை ஏகபோகமாக அனுபவித்து வருவதைக்கண்ட தியாகராய பெருமானும், நாயர் பெருமானும் இந்த ஸ்தாபனத்தை நிறுவினார்கள். பின்னர் இப்பொழுது நாம் நமது இலட்சியம் திராவிட நாட்டை தனிநாடாகப் பிரித்து தனி ஆட்சி நிறுவ வேண்டுமென்பதாகும். நாம் எத்தனை நாளைக்கு இவ்விழி நிலையிலிருப்பது? இவ்வாரிய ஆதிக்கத்துடன் இருந்தால் நாம் என்றாவது சுயமரியாதையுடன் சுதந்திரத்துடன் வாழமுடியுமா? அறிவு பெற முடியுமா? பொதுநல உணர்ச்சி பிறக்க இடமேற்பட முடியுமா? ஆகவே, இவ்வாறு தனித்துப் போக முடிவு செய்ததிலும், நமது கட்சி திராவிடர் கட்சி என்று விளங்கவேண்டும் என்று மாற்றியதிலும் தவறு இருக்க முடியுமா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

ஏனைய கட்சிகள் தங்கள் இலட்சியங்களை மாற்றிக்கொண்டு மக்களைத் தங்கள் வழிக்குத் திருப்பிக்கொண்டு வரும்போது நாம் மட்டும வாளாவிருத்தல் அழகா? நீங்களே முடிவு செய்யுங்கள்.

எனவே, நமது முன்னுள்ள முக்கிய வேலை சமுதாய இழிவுகளைப் போக்கி சமத்துவத்தை அடைய வழிதேடவேண்டுமென்பதும் தனி நாடு பெற உறுதியுடன் முன்வரவேண்டும் என்பதுமாகும்.

வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் என் ஜீவரத்னம் யாவரையும் வரவேற்று இனிய சொற்பொழிவாற்றினார்.

தோழர் என். சங்கரன் அவர்களை மாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு தோழர் டி. பழனிச்சாமி பிரேரேபித்தார். தோழர்கள் எஸ். வி. லிங்கம், டி. சண்முகம் ஆகியவர்கள் ஆமோதித்தார்கள். தோழர்கள் சி. தங்கராஜ், பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் ஆதரித்தார்கள்.

ரோஜா முத்தையா

பெரும் கைதட்டுதலுக்கிடையே தோழர் என். சங்கரன் அவர்கள் தலைமைதாங்கி தமது சொற்பொழிவை நிகழ்த்தினார் அதன் சாரம் வருமாறு:—

### சேலத்திற்குப் பின்

சேலம் மாநாடு முடிந்து இன்று ஏழு மாதங்களாகி விட்டன. இந்தக் காலங்களில் நாம் சும்மாயிருக்கவில்லை. திராவிட மக்களின் சமீபகால அரசியல் சரித்திரம் கண்டிராத வண்ணம் மிகப் பெரிய வேலைகளைச் செய்து வந்திருக்கிறோம். திராவிடர் கழகம் இன்று 30,000 அங்கத்தினர்களுக்கு மேல் பெற்றிருக்கிறது. நமது தலைவர்கள் என்றிருந்தவர்களில்—அதிலும் முக்கியமானவர்கள் என்பவர்களில் சிலரும் நம்மை விட்டு சேலத்தில் பிரிந்து போய் விட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் தான், நாம் எதிர்பார்த்திராத இந்த அபூர்வ வெற்றியை அடைந்திருக்கிறோம். கட்சிக்கு அங்கத்தினர் சேர்க்கும் பணியை நான் ஏன் இவ்வளவு முக்கியமாக, ஏதோ செயற்கரிய காரியமாகப் பிரமாதப்படுத்திக் கூறுகிறேன் என்றால், நம்மைக் குற்றம் சொல்லுபவர்கள் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்? எங்கே ஸ்தாபனம்? யார் தலைவர்? பெரியார் தலைமையை மக்கள் விரும்புகிறார்கள் என்பதற்கு ஆதாரமென்ன? என்ற கேள்விகளைக் கேட்டு மக்களை ஏமாற்ற கைமுதல் ஆயுதமாக உபயோகப்படுத்தி வருவதின் காரணமாகவே இங்ஙனம் குறிப்பிடுகிறேன்.

### நமது தலைவர் பெரியார் 19-ஆம் நூற்றாண்டில் ஏசு, நபி போன்றவர்

தலைவர் பெரியார் அவர்கள் திராவிடத்தின் "ஏகத்தலைவர்" தான் என்பதில் இன்று யாருக்கும் சிறு துளியும் சந்தேகமில்லை; நம்மில் சிலர்கூட, பகிரங்கமாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அந்தரங்கத்தில் மிகப்பெரிய நம்பிக்கைகொண்டிருக்கிறார்கள். பெரியார் அவர்கள் இந்த நூற்றாண்டின் கிறிஸ்து மாதிரியும், நபிகளைப்போலவும், ஒப்புயர்வற்ற ஒரு "தீர்க்கதரிசி." திராவிடர்களுக்கென்று சரியான மதமோ, சமுதாயக் கொள்கைகளோ, ஆரியக் கலப்பில்லா

(தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)

## குரு மருந்துசாலை ஸ்தாபகராகிய எங்கள் அருமைத் தந்தையார் ராவ்பகதூர் டாக்டர் ஏ. மதுரம் அவர்கள் 7-4-44ல் இயற்கை எய்தினார்கள். அவர்களின் ஞாபகார்த்தமாக இதை வெளியிடுகிறோம்.

வெண்பா:

உண்மை ஒளியே! உயர்வுக் குரைகல்லே!
திண்மை திகழ்ந்திலகு தீரனே!—வண்மைக்கோர்
ஊற்றே! எளியவர்தம் உயிரேயாம் எந்தையே
ஆற்றேம் இனியாம் அருள்.

செம்மையும் அன்பும் செறிந்திடும் மெய்யுணர்வும்
இம்மையில் உம்போல் எவர்க்கெய்யும்—மெய்ம்மைசேர்
எந்தையே எம்வாழ்வே என்றுமைக் கண்டிடுவோம்
சிந்தையாய் சார்ந்திட்டார் வீடு.

ஆசிரியப்பா

எம்மகத் திருந்த இன்னொளி தானே
இம்மெனச் சென்றது எங்கென அறியேம்

அவ்வொளி இருந்த அகத்தை மற்றொரு
செவ்வொளி கொண்டு செறித்தற் கரிதே

சதுரமாய்ப் பேசும் சற்குண போத!
மதுரம் என்னும் மங்காப் புகழோய்!

தந்தை மகற்குத் தகவாய் ஆற்றும்
சந்தப் பணியைத் தகவே எமக்கு

ஆற்றி முன்னர் அவையத் திருக்கும்
பேற்றை யாங்கள் பெறவே வைத்தோய்!

'இறைவன்' பொன்னடி இன்னறு நிழலில்
உறைந்து என்றும் ஒளிபெற் றிடுவே.

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ், திருச்சிராப்பள்ளி.

# தயாராயிருங்கள்.

———‡———

பேச்சாற்றல் படைத்த பேரன்புடைய மாணவத் தோழர்களே, வாலி யர்களே,

"மாணவர்களே உங்களைத் தவிர இந்தக் கேடுகெட்ட நாட்டை இழிவுபட்ட இனத்தை மேம்படுத்த யார் இருக்கிறார்கள்" என நமது தலைவர் பெரியாரவர்கள் திருச்சி வடமண்டல மாணவர் மாநாட்டில் கூறியதையும், அண்மையில் இருத்தவக் கல்லூரியில் கலை, மதம், கடவுள் இவைகளைக் குறித்துத் தீர்ப்புக் கூற நம்மை நமது தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் அழைத்ததையும்,

'எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செய புறப்படு வெளியில்!" என நமது உயிர்க்கவி பாரதிதாசன் மாணவரை அழைத்துள்ளார், தென்னாற்காடு திராவிட மாணவர் மாநாட்டுக்குத் தாம் அனுப்பிய செய்தியில், என்பதையும் சிந்தனையிலே வைத்து செயலாற்றச் செல்வோம் எனும் நல்லெண்ணத்துடன் நாடு சுற்றி பட்டி தொட்டிகளில் தன்மானக் குரலெழுப்பத் தயாராகுங்கள். விடுமுறையை வீணாக்காது நமது திராவிட நாட்டை திராவிடக் கோட்டமாக்கத் திரண்டு வாருங்கள்.

காலிலே நோய் கண்டும் நாடு சுற்றிய நம் பெரியாரை ஓய்வெடுக்க கட்டாயப்படுத்துவோம் என்று திட்டம் வகுத்து திக்கெட்டும் செல்ல திண்மையுடன் வாருங்கள் ஈரோட்டிற்கு.

என்று? எப்பொழுது? என அவசரப்படும் அன்பர்களே,

பொறுமையாய் அடுத்த அறிக்கையைப் பாருங்கள். திட்டம், பயிற்சி முறை முதலிய முழு விவரங்களும் வெளியிடப்படும். அனேகமாக அடுத்த அறிக்கை கண்ட இரண்டொரு நாட்களில் ஈரோடுவரத் தயாராயிருக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

செயலாற்றும் செம்மல்களே,

சென்ற விடுமுறைகளில் நம் மாணவமணிகள் மாவட்டம் சுற்றிய காலையில் தாங்கள் செய்த உதவியை இம்முறையும் தட்டாது செய்யும்படி அன்பாய் கேட்டுக் கொள்வதுடன் உடனே ஆங்காங்கு கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து எழுதும்படி தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்கள் ஒரு மாதத்திற்குமேல் சுற்றத் தயாராய் இருக்கிறார்கள். இந்நல்ல தருணத்தைப் பயன்படுத்தி பட்டி தொட்டிகளிலும் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யுங்கள். ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு தோழர் தயவு செய்து பொறுப்பெடுத்துக் கொண்டு அவரவர்கள் தாலுகாக்களிலுள்ள கிராமங்களிலெல்லாம் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து உடனே எழுதுவதுடன் இன்னும் 10 நாட்களில் வரவிருக்கும் மாணவர்களை வரவேற்கத் தயாராயிருக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரையும் அழைப்புகள் அனுப்பிய பெரியார்களுக்கு அடுத்த கிழமை நாள் குறித்து தெரிவிக்கப்படும்.

சென்ற முறைகளில் மாணவர்கள் தஞ்சை, சென்னை, வடஆற்காடு முதலிய மாவட்டங்கள் செல்லவில்லை. கோவை மாவட்டத்திற்கு மாணவர்கள் சென்றும் சரியானபடி கூட்டங்கள் நடத்த முடியாது போயிற்று. இம்முறை மேற்கண்ட மாவட்ட நமதியக்கப் பெரியார்களை கேட்டுக்கொள்கிறேன் மாணவர்கள் பிரசாரத் திட்டத்திற்கு துணைபுரியும்படி. வடஆற்காடு மாவட்டத்திலிருந்து பல வாலிபர்கள் சென்ற முறைகளில் மாணவர்கள் வராமை குறித்து வருந்தி எழுதியுள்ளார்கள். அவ்வாறு இம்முறை ஏற்படாதென்றே கருதுகிறேன்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரச்சாரக்
கழகம், ஈரோடு.

*　　　*

மதுரைமாவட்டத் தோழர்களே!

மதுரைமாவட்டத்தில் கோடை விடுமுறையில் திராவிட மாணவர்கள் பிரசாரம் நடைபெறுவதால் மதுரை மாவட்டத்தில் கூட்டம் நடத்த விரும்புகிறவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

சி. முத்திருளாண்டி, திராவிடர் கழகம், 55 D, புட்டுத்தோப்பு ரோடு, மதுரை.

## மாணவர் பயிற்சி

கோடை விடுமுறையில் மாணவர்கள் சுற்றுச்செலவில் கலந்து சொற்பொழிவாற்ற திருப்பாதிரிப் புலியூர் திராவிட இளைஞர் கழகத்தில் தோழர் ஆ. திராவிடமணி தலைமையில் பல திராவிட மாணவர்கள் பயிற்சிபெற்று வருகிறார்கள்.


மாந்தலே: அதற்குப்பின் 100 மைல்
தெற்கில் சிலர் போர் நடத்துகிறார்கள்
ஆனால்,
அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகச்
செல்லுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு
வசதிகள்
அதிகம் தேவைப்படுகின்றன.
ஆகவே
நமது வீரர்களைத் துரிதப்படுத்த
மே. த. கவர்னர்
யுத்த நிதியில்
துருப்புக்கள் வசதி நிதிக்குப்
பணம் கொடுத்து உதவுங்கள்

குடி அரசு

1945-வது ஏப்ரல்-மீ 7-உ

# திராவிட சமுதாயமே!

தாழ்வுற்றுள்ள, அடக்கப்பட்டுள்ள, கீழ்மைப்படுத்தப்பட்டுள்ள ஒரு சமூகமோ, ஒரு நாடோ முன்னேற்றமடையவேண்டுமானால் தனிப்பட்ட ஒருவரால்தான் முடியும். அவர் மீது மக்கள் வைக்கும் நம்பிக்கையையும், உறுதியையும் பொறுத்துத்தான் விடுதலையடைய முடியும். இதற்கு உதாரணங்கள் பல உண்டு.

காட்டுமிராண்டித்தனமாக கட்டுப்பாடு இல்லாமல் ஒழுக்கம் கெட்டுத் திரிந்த மக்களைக் கட்டுப்பாட்டுக்கும் ஒழுக்கத்திற்கும் உட்பட்டு நடக்கும்படி செய்ய இயேசு கிறிஸ்து, முகமது நபி போன்றவர்கள் தோன்றினார்கள். அவர்கள் எந்தவிதமான ஸ்தாபனத்தையும் நிறுவவில்லை. தமது கொள்கையைப் பரப்புவதற்கும், மக்களைத் திருத்துவதற்கும் அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட முயற்சியினாலும் அவர்கள் மீது மக்கள் வைத்த நம்பிக்கையினாலும் முன்னேற முடிந்தது.

இதுபோலவே அரசியல் துறையில் பிற்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டு மிக இழிவான நிலையிலிருந்த துருக்கி, ருஷ்யா போன்ற நாடுகள் இன்று உலகம் மதிக்கப்படும் நிலையடைந்தது எதனால்? ஒரு முஸ்தபா கமால் பாட்சாவாலும் ஒரு லெனினாலுமல்லவா? அவர்கள் தங்கள் தங்கள் தனி முயற்சியினால், பாடுபட்டதினால் அல்லவா, அவ்விரு நாடுகளும் இன்றைய நிலைக்கு வந்தது? அவர்கள்மீது மக்கள் தளராத நம்பிக்கையும் உறுதியும் கொண்டிருந்ததினாலுமல்லவா இன்று அந்நாடுகளை உலகம் மதிக்கிறது? அவர்கள் அன்று எந்த ஸ்தாபனத்தை வைத்திருந்தார்கள்? என்ன நிதி வைத்திருந்தார்கள்? அப்படியே அவர்கள் ஸ்தாபனங்களையும், நிதியையும் வைத்திருந்தார்கள் என்று வைத்துக்கொண்டாலும், சமூகத்தையும் நாட்டையும் அடக்கி ஒடுக்கி வருகிறவர்களும் அவர்களுடைய ஸ்தாபனங்களும் அவைகளை விட்டுவைத்திருக்குமா என்பதையே யோசித்துப் பார்க்க வேண்டும்.

பிற சமூகங்கள் எவ்வாறு முன்னேற்றமடைந்தன, பிறநாடுகள் எவ்வாறு விடுதலையடைந்தன என்ற சரித்திரத்தைத் துருவிப் பார்த்தால் இந்த உண்மை விளங்காமல் போகாது.

இன்று நம்நாடும், நம் சமுதாயமும் அதுபோலவே தாழ்வுற்று இழிவு படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் முன்னேற்றமடையப் பாடுபடும் எவரும் ஸ்தாபனம், நிதி முதலியவைகளை வைத்துக் கொண்டு பாடுபட முடியுமா? அப்படியே ஸ்தாபனம், நிதி முதலியவைகளை வைத்துக் கொண்டு பாடுபட்டால், இவ்வளவு காலமாக அடக்கி ஒடுக்கி வரும் சமூகம், நாடு, விட்டு வைக்குமா என்பதை எண்ணிப்பாருங்கள். அவைகளை உடனே அழித்து ஒழித்து விட்டல்லவா வேறு வேலை பார்க்கும் என்பதையும் எண்ணிப் பாருங்கள்.

இதை எண்ணித்தான், சென்னையில் 1-4-45-ந் தேதி நடைபெற்ற சென்னை மாவட்ட 14-வது திராவிட (ஜஸ்டிஸ்) மாநாட்டிற்குத் தலைமை வகித்த திருச்சி தோழர் என். சங்கரன் அவர்கள்,

> "பெரியார் அவர்கள் இந்த நூற்றாண்டின் கிறிஸ்து மாதிரியும் நபிகளைப் போலவும் ஒப்புயர்வற்ற ஒரு தீர்க்கதரிசி"

என்று கூறியிருக்கின்றார். இதற்குள்ள காரணத்தையும் அவர் விளக்கியுள்ளார்.

அதாவது,

> "திராவிடர்களுக்கென்று சரியான மதமோ, சமுதாயக் கொள்கைகளோ, ஆரியக் கலப்பில்லாமல் இல்லாதிருக்கிற நிலைமையில், திராவிட மக்களுக்கென்று சமுதாய அரசியல் கொள்கைகளை வகுத்துக் கூறும் ஒருவரை "தீர்க்கதரிசி" எனக் கூறாமல் பிறகு எம்மொழிகொண்டு குறிப்பிடுதல் இயலும்?"

என்றும் கேட்டுள்ளார். இதை எவ்வாறு மறுக்கமுடியும்? இதுவரை நமது திராவிட சமுதாயத்திற்கு ஆரியக் கலப்பில்லாத மதமோ, சமுதாயக் கொள்கைகளோ இல்லாதிருந்ததினால்தான் நம் சமுதாயம் ஆரியத்திற்கும் அன்னியருக்கும் இவ்வளவு காலம் அடிமையாகயிருக்க நேரிட்டதென்பதை எவரும் மறுக்கமுடியாதென்றே கருதுகின்றோம். இன்று திராவிடர்களிடையே ஓரளவுக்கு விழிப்பு ஏற்பட்டிருக்கிறதென்றால், திராவிடர்கள் தனி இனம், அவர்களது மதம், கொள்கைகள் வேறு, ஆரியர்களது வேறு என்று பெரியார் அவர்கள் எழுதியும் பேசியும் வருவதினாலன்றோ?

ஒரு நாட்டில் மக்கள் விழிப்படைகிறார்கள், விடுதலைக்காக பாடுபடுகிறார்கள் என்றால், உடனே ஆரியர்கள் அச்சமூகத்திலிருந்து ஓரிருவரைப் பிடித்து, அவர்களுக்குச் சலுகைகள் காட்டி மக்களின் விழிப்புத் தன்மையையும் விடுதலை யுணர்ச்சியையும் அழித்து அம்மக்களை மேலும் மேலும் அடிமையிலும் இழிவான நிலைமையிலும் வைத்திருப்பார்கள். இத்தகைய சம்பவங்கள் எங்கும் புதிதல்ல. அன்றும் நடந்திருக்கின்றன, இன்றும் நடந்து வருகின்றன. அதிலும் இந்நாட்டுக்கோ எனில் அது மிக மிகப் பழமையானதும் பழக்கமானதுமாகும். அவ்வாறு பிரிந்து எதிரியுடன் சேர்ந்தவர்களுக்கு கோவில்கள் கட்டி இன்றும் பூசித்துவருவதையும் பார்க்கலாம். இந்த இருபதாவது நூற்றாண்டிலும் அவ்வாறு ஏற்படாது என்று எண்ணுவதற்கும் இடமில்லாமலே யிருந்து வருகின்றன சம்பவங்கள். ஆனாலும், விழிப்படைந்த சமூகம் உணர்ச்சி பெற்ற சமூகம் உறுதியும் ஊக்கமும் கொண்டிருக்குமானால், எதிரிகளின் எத்தகைய சூழ்ச்சிகளும், நயவஞ்சகங்களும் நம்மவர்களின் காட்டிக்கொடுக்கும் தன்மையும் ஒன்றும் செய்யாதென்றே நாம் தைரியமாகக் கூறுவோம்.

நம் மக்கள் உறுதியுடன் விளங்குவதற்கு இன்றைய நம்நிலைக்குக் காரணம் என்ன என்பதை நன்கு

ரோஜா முத்தையா

உணர்ந்து கொள்ளவேண்டும். இதையும் சென்னை மாவட்ட மாநாட்டைத் திறந்து வைத்த பழையகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தமது திறப்பு விழாவில்,

“நம் நாடும், நாமும் இந்நிலையில் இருப்பதற்கு என்ன காரணம்? நம் நாடு அந்நியர்களால் அடக்கி ஆளப்படுவதற்கும் வறுமையில் ஆழ்ந்து கிடப்பதற்கும், அடிக்கடி அன்னியர் படையெடுப்புகள் ஏற்பட்டதற்கும், உலகத்தில் மிகப் பின்னணியிலிருந்து வருவதற்கும், வெகு காலமாய் காரணமாகயிருந்து வருகிற காரணம் என்ன? மத சம்பந்தமாயுள்ள ஆயிரக்கணக்கான குருட்டு நம்பிக்கைகளும் சமூக வாழ்வில் உள்ள சற்றும் மனிதத் தன்மைக்குப் பொருந்தாத மூடப்பழக்க வழக்கங்களையுடைய ஸ்தாபனங்களும் ஆகிய யோக்கியப் பொறுப்பற்ற தன்மைகள் தான் என்பதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கிறேன்.”

என்று குறிப்பிட்டிருப்பதை மக்கள் எண்ணிப்பார்ப்பதோடு,

“இவைகள் அடியோடு ஒழிக்கப்படாமல் நாம் மற்ற நாட்டார்கள் முன்னிலையில் தாழ்த்தப்படாமலும் இழிவுபடுத்தப்படாமலும் இருக்க என்றாவது முடியுமா?”

என்று தோழர் அர்ச்சுனன் அவர்கள் கேட்டிருப்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதுதான் நமது ஆசை. இதற்குத் தக்கசமயம் இதுதான். பெரியார் அவர்களின் வாழ்நாளிலே திராவிட சமுதாயம் விழிப்படைந்து ஒற்றுமைப்பட்டு விடுதலையடையவில்லையானால் இனி எக்காலும் முடியாது. இதை மனதில் வைத்து திராவிடமக்கள் உறுதியுடன் நடந்துகொள்வார்களாக.

## திருமணம்

பம்பாய் திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் சார்பில் 14-3-45-ந் தேதி தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் தோழர்கள் மணி—புஷ்பவதி ஆகியவர்களுக்கு சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

# திராவிடர் கழகத்திற்கு
## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)
## 7-4-45ந் தேதி வரை 30668 அங்கத்தினர்கள் ரூ.3044—6—0 சந்தா

எப்ரல் மாதம் 7ந் தேதி வரை திராவிட கழகத்திற்(ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 5464 | 9. வடஆற்காடு | 1571 |
| 2. தஞ்சை | 5061 | 10. மதுரை | 1377 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 780 |
| 4. திருச்சி | 3886 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 168 |
| 5. இராமநாதபுரம் | 2096 | 13. இலங்கை | 165 |
| 6. திருநெல்வேலி | 2084 | 14 பெங்களூர் | 158 |
| 7. சென்னை | 1700 | 15. புதுக்கோட்டை | 59 |
| 8. தென்ஆற்காடு | 1638 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 30668. சந்தா ரூ 3044-6-0.

## அவலூர்பேட்டை பகுத்தறிவு கழகம்

தென்னார்க்காடு மாவட்டத்தில் ஓர் மாநாடு நடத்துவது பற்றி யோசிப்பதற்காக டி கழகத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 15-4-45-ந் தேதி கூடும் என்றும் அதுசமயம் மாவட்டத்திலுள்ள எல்லாக் கழகத்தாரும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டப்படுகிறது என்றும் டி கழகக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

## ஈரோட்டில் கண்டனக் கூட்டம்

ஈரோடு டவுன் அலிசவக்கில் 5-4-45ந் தேதி மாலை 8 மணிக்கு நேவல் தோழர் கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

“தற்சமயம் ஈரோடு முனிசிபாலிட்டியார் சுயமரியாதையை இழந்து ஏற்கனவே எலக்ட்ரிக் கம்பெனிக்காரர் ஒப்புக்கொண்டிருந்த நிபந்தனைகளைவிட மோசமான நிபந்தனைகளுக்கு வலிய ஒப்புக்கொண்டு கம்பெனியாரிடம் சரணாகதியடைவதை வன்மையாகக் கண்டிப்பதோடு, எலெக்ட்ரிக் லைசென்சை முனிசிபாலிட்டிக்குக் கொடுக்காமல் ஒரு வெள்ளைக்காரக் கம்பெனிக்குக் கொடுத்ததற்காக சர்க்காரைக் கண்டிப்பதோடு மாத்திரமல்லாமல் இம்மாதிரி ஒரு முனிசிபாலிட்டிக்குள் புகுந்து சர்க்கார் தயவில் லைசென்ஸ் பெற்று கொள்ளை லாபம் சம்பாதிக்கக் கருதும் காண்டிராக்டர்களுக்கும் புத்தி புகட்ட வேண்டும் என்று கருதி சிறிதும் விட்டுக்கொடுக்காமல் சென்ற சுமார் 14 வருஷகாலமாக முனிசிபாலிட்டியார் எலெக்ட்ரிக்கரெண்டை பகிஷ்கரித்து வந்ததுபோலவே இனியும் டி கம்பெனிக்காரர் காண்ட்ராக்டு காலம் முடியும் வரை, முனிசிபாலிட்டியார் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.”

## தென்னார்க்காடு மாவட்ட திராவிட மாணவர் மாநாடு வரவுசெலவு

மேற்குறித்த மாநாட்டிற்கு
மொத்த வரவு ரூபாய் 1779-0-0
மொத்த செலவு ரூபாய் 1605-1-6
மிகுதி இருப்பு ரூபாய் 173-14-6
தோழர் வ. வீரபத்திரன் அவர்கள் வசம் உள்ளது. பொருளுதவியும் உடலுழைப்பும் நல்கிய தோழர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏ. ஆர். சி. இராமலிங்கம்,
எஸ். கோவிந்தசாமி.

# தெளிவாக்குவாரா?

(நமது நிருபர்)

"பாலின்மையால் குழந்தைகள் மெலிந்தன............"

தோழர் ராதாபாய் சுப்பராயன் அவர்களின் மத்திய சட்டசபை பேச்சு.

ஷை அம்மையார் கடவுளின் பெயரால் கும்பாபிஷேகத்திற்கும், யாகத்திற்கும், பாலபிஷேகத்திற்குமாக நம் நாட்டில் தினந்தோறும் எத்தனை ஆயிரம் குடம் பாலும் நெய்யும் வீணாக்கப்படுகிறதென்பதை அறிவாரா?

o o

"தோழர் காந்தியவர்களை வைசிராய் கூப்பிட்டு சமாதானம் பேசி இருந்தால் நாட்டில் இவ்வளவு குழப்பம் ஏற்பட்டிருக்காது"

தோழர் டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் (19-3-45-ல்) ஜலகண்டபுரத்தில் பிரசவ விடுதிகளின் அஸ்திவாரக்கல் நாட்டு விழாவின் போது பேசிய பேச்சு.

இவர் எந்தக் குழப்பத்தைப் பற்றிப் பேசினார் என்பதை அவரால் தெளிவாக்கப்படவில்லை. இவர் பேசும் போது இவருக்கிருந்த மனக்குழப்பத்திலே இந்தக் குழப்பம் தெளிவாக்கப்படவில்லை போலும்.

ஜனாப் ஜின்னா அவர்களின் மாளிகைக்கு தோழர் காந்தியவர்கள் சமரசத்திற்காகப் போன சமயம் நீர் யாருடைய பிரதிநிதியாக வந்திருக்கிறீர் என்று ஜனாப் ஜின்னா அவர்கள் கேட்ட கேள்விக்குச் சரியான பதில் சொல்லமுடியாத தோழர் காந்தியவர்களைத் தோழர் சுப்பராயன் அவர்கள் வைஸ்ராய் யாருடைய பிரதிநிதியாக அழைத்துப் பேச விரும்புகிறார் என்பதை தெளிவாக்குவாரா?

இன்னும் அவர் குழப்பிய வார்த்தைகளுக்கெல்லாம் நமது 'முதலாவதாக சுயமரியாதை மாநாட்டைத் திறந்து வைத்த பெரியார் என்பதற்காகவும் இன்றும் நமது தன்மதிப்பியக்க கட்சியில் சேர்ந்து தொண்டு செய்ய வரக்கூடியவர் என்கிற அபிப்பிராயத்தினாலும் நேரடியாகப் பல கேள்விகளைக் கேட்டு அவரைத் திணற வைக்க விரும்பவில்லை என்பதை அவர் தெரிந்து கொண்டால் நல்லது.

## அம்பேத்கார் மாணவ இல்லம்

திருச்சி ஹரிஜன விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட 14-க்கு மேற்பட்ட மாணவர்களுக்காகவும் மற்ற தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காகவும் ஏற்பட்டுள்ள அம்பேத்கார் மாணவ இல்லத்திற்கு தாராளமாக பொருளுதவி செய்யுமாறு ஷை இல்லத்தின் கௌரவ மானேஜர் வேண்டுகோள் விடுத்துள்ளார். பொருளுதவி செய்பவர்கள் ஷை இல்லத்தின் கௌரவ மானேஜர் அன்ற முகவரிக்கு அனுப்பக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## திருப்பத்தூர் டவுன் கோவாபரேடிவ் பாங்கி

ஷை பாங்கியின் வருட மகாசபைக் கூட்டம் தோழர் ஜி. சாமி நாயுடு பி. ஏ., பி. எல்., தலைமையில் 25-3-45-ந்தேதி நடைபெற்றது. விதிகள் திருத்தப்பட்டது. தோழர்கள் ஜி. சாமி நாயுடு, சீனிவாச ராகவாச்சாரி, சி. எம். சுப்பிரமணிய நாயுடு, வி. எஸ். வீரபத்திரபிள்ளை, எம். நடேச பிள்ளை, பி. சாப்ஜி சாயபு, தாவுத்கான் சாயபு ஆகியவர்கள் அடுத்த ஆண்டுக்கு டைரக்டர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

## நீத்தார் நினைவு நாள்

சயங்கொண்டம் தோழர் பாஸ்கரன் அவர்கள் வாழ்க்கைத் துணைவி மங்கையர்க்கரசியார் 22-3-45-ல் இயற்கையெய்தியதை முன்னிட்டு 23-3-45-ந் தேதி அன்று நடந்த சவ அடக்கச் சடங்கின் பொழுது திராவிடர் கழகத்தின் சார்பிலும் பொது மக்கள் சார்பிலும் இரங்கல் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

25-3-45 காலை 10 மணிக்கு தோழர் எ. தெத்சன அவர்கள் தலைமையில் நடந்த நீத்தார் நினைவு நாள் கூட்டத்தில் கடலூர் தோழர்கள் ஆ. திராவிடமணி பி. ஏ., கி. வீரமணி ஆகியோரும் பாஸ்கரன் அவர்களும் மங்கையர்க்கரசியாரின் அருங்குணங்களைப் பாராட்டிப் பேசினார்கள். 'குடி அரசு' வளர்ச்சி கருதி ரூபாய் 1 அனுப்பப்பட்டது.

• •

இராசிபுரம் தோழர் எஸ். துரைசாமியவர்கள் தாயார் பொன்னம்மாள் 22-3-45-ல் இயற்கையெய்தினார்.

## திருமணங்கள்

காரைக்கால்: குடந்தை தோழர் சா. வீரமணிக்கும் காரைக்கால் தோழர் பா. ஞானம்மாளுக்கும் தோழர் வ. காளியப்ப நாடார் அவர்கள் தலைமையில் 22-3-45-ந் தேதி சீர்திருத்தத் திருமணம் நடந்தது. தோழர் சிவம் 'சீர்திருத்தம்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

• •

தமிழ்நாடு வித்யாவிலாச சங்கம் (திருச்சி) ஆதரவில், 9-3-45-ஆம் தேதி திருச்சி கருணாநிதி பார்க்கில் தோழர் ஜே. எஸ். ராமானுஜம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் சிந்தாமணி தோழர் கோவிந்தராசலு அவர்களுக்கும், சுபான்கார்த்தெரு தோழர் கண்ணம்மாளுக்கும் மறுமணம் நடைபெற்றது. பல தோழர்கள் பேசினார்கள்.

அத்திருமண வைபவத்தின்பொழுது திருச்சி தமிழ்நாடு வித்யா சங்கக் கூட்டுக் காரியதரிசி எஸ். பார்வதி அம்மையாருக்கு மார்கழி 17ந்தேதி பிறந்த ஆண் மகவுக்கு அன்புமணி என்று பெயர் சூட்டப்பட்டது. 'குடி அரசு'க்கு ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.


## விளம்பரம்


காகிதக் கைத்தொழிற்பயிற்சி எங்கள் தொழிற்சாலையில் 1-5-45 முதல் 30-5-45 முடிய நடத்தப்படும். விவரமும் விதிகளும் வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு 0-4-0 நான்கு அணா தபால் தலை அனுப்பவும்.

S. சோமசுந்தரம், செயலாளர்,
திராவிடநாடு காகிதத் தொழிற்சாலை,
ஓட்டக்குடி, தெப்பக்குளம் P. O.
திருச்சினாப்பள்ளி.

## கொசு வலைகள்

நன்றாய் தைக்கப்பட்டதும், நீடிக்கக்கூடியதுமான நன்கு மூலைகள் முழுமையும் உள்ள சிறந்த வெள்ளை வலைகள். ஒவ்வொரு ஆர்டருக்கும் ஒரு லேட் இனாம்.



| நீளம் | அகலம் | உயரம் | சாதாரணம் | சிறந்தது | ஸ்பெஷல் |
|---|---|---|---|---|---|
| 6 அடி | 3½ அடி | 3½ அடி | ரூ. 4/10 | 5/10 | 7/ 4 |
| 6 „ | 4 „ | 4 „ | „ 5/ 6 | 6/10 | 8/ 2 |
| 6½ „ | 4½ „ | 4½ „ | „ 6/ 2 | 7/10 | 8/12 |
| 7 „ | 5 „ | 5 „ | „ 7/ 4 | 8/ 6 | 10/- |
| 7½ „ | 6 „ | 6 „ | „ 8/- | 9/ 6 | 11/- |

பாக்கிங் & போஸ்டேஜ் ரூ. 1.

இரண்டு ஆர்டர்களுக்கு தபால்செலவு இனாம்.

The Indian Trading Co.. Post Box No. 12220 Calcutta.


ரோஜா முத்தையா

# நமது தலைவர் பேட்ஜ்

நமது தலைவர் பெரியாரின் உருவம் அமைந்த பேட்ஜ் அழகிய கலரில் வெளிவந்துள்ளது. ஒன்றின் விலை 0—1—0. தேவைக்கு எழுதுக. தக்க லாபமுண்டு.

நமது இயக்க எல்லா பத்திரிகை ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

திராவிடன் பதிப்பகம்,
133-லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)

( 4-ம் பக்கத் தொடர்ச்சி)

மல் இல்லாதிருக்கிற நிலைமையில், திராவிட மக்களுக்கென்று சமுதாய அரசியல் கொள்கைகளை வகுத்துக் கூறும் ஒருவரை, "தீர்க்கதரிசி" எனக் கூறாமல், பிறகு எம்மொழி கொண்டு குறிப்பிடுதல் இயலும்? எதிர்கால திராவிட சரித்திரத்தில் இன்று பெரியாரின் சொல்லும், செயலுமே மதமாயும், வேதமாயும் இருக்கும். ஆகையால் அப்படிப்பட்ட ஒருவருக்கு நிர்வாகக் கமிட்டியோ, ஆலோசனை போர்டோ, காரியதரிசிகளோ அவரை நடத்திச் செல்வதற்குத் தேவையில்லை, வெறும் அரசியல் தலைவராக மட்டும் அவரைக் கருதுகிறவர்களே அவருக்கு நிர்வாகக் கமிட்டி வேண்டுமென்றும், கட்சியை ஸ்தாபன அமைப்பு முறைப்படி நடத்திச் செல்ல வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். தோழர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று "ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் நாம் பார்க்கவே முடியாத தலைவர் "தீர்க்கதரிசி," பெரியார் அவர்கள் ஆவார்" என்பதைக் குறைகூறுபவர்கள் சற்று சிந்திக்குமா ஆசைப்படுகிறேன். கிறிஸ்துவும், நபியும் அவர்கள் கொள்கைகளை நிலைபெறச் செய்துவிட்டுப்போக எந்த ஸ்தாபனத்தை வைத்துக்கொண்டிருந்தார்கள்? எந்த நிர்வாகக்கமிட்டியை அமைத்துக்கொண்டிருந்தார்கள்? தன்னினத்தின் உண்மையான வரலாற்றை அறிந்து கொள்ள முடியாமல் பல்வேறு கலை நாகரீகம், பழக்கங்களால் சிதைவுற நேர்ந்த ஒரு சமுதாயத்தைப் புதுமலர்ச்சி பெறச் செய்த—செய்யும் ஒருவரை நாம் சாதாரண அரசியல் தலைவரைப்போல் கருதி இவைகளை எதிர்பார்க்கலாமா?

## நம்நாட்டு அரசியல் விபரீதம்!

சமுதாயத்தில் ஆரியருக்கு அடிமையாய் இருப்பதுபோலவே, அரசியலில் ஆங்கிலேயருக்கும் சேர்த்து "வாழ்க்கை அடிமை"களாகவே இருந்து வருகிறோம். ஆரியர்களுக்கு அன்று எழுதப்பட்ட மத சம்பந்தமான புராணப் புத்தகங்கள் ஆதாரம் இருந்து வருவதைப்போல, அரசியலில் இன்று தினசரி, வாரத்தாள்களும், தயாரிக்கப்பட்டுவரும் புத்தகங்களும், ஆதாரமாக இருந்துவருகின்றன. முக்கியமாக இந்த சென்னை நகரிலுள்ள பத்திரிகாலயங்களைச் சார்ந்தோர் பொழுது போக்குக்காக மௌண்ட்ரோட் ஓட்டல் மாக்களிலும், ஓட்டல்களிலும், வேடிக்கையாகப் பேசி செய்துகொள்ளும் முடிவுகள் இந்நாட்டின் அரசியலாய் இருப்பதை நான் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கிறேன். பத்திரிகைகளெல்லாம் பெரிதும் ஆரியர்களின் சொந்தமானதாகவும் அவர்கள் அதிகாரத்திற்கும் நிர்வாகத்திற்கும் கீழ்ப்பட்டதாகவும் இருக்கின்ற [illegible]தான் இப்படிப் பட்ட மோசடிகள், அரசியல் சம்பவங்களாய், பல துறைகளில் வெற்றியடைந்து வருகின்றன.

## சர்க்காருக்கு எச்சரிக்கை

அரசியலில் இன்று மற்றொரு முக்கியமான சம்பவம் காங்கரஸ்காரர்கள் மீண்டும் மாகாணங்களில் "மந்திரிசபை" அமைப்பதற்கு செய்யும் "இரா மறைவு" நாடகங்கள் ஆகும். எப்படியேனும் "அஞ்ஞாதவாச"த்தை துறந்து மந்திரிகளாகித் தீரவேண்டுமென்ற நமது மாகாண ஆரியர்களின் கட்டுப்பாடான சூழ்ச்சியும், முயற்சியும் எல்லைப்புற மாகாணத்தில் இப்போது வெற்றியடைந்திருக்கிறது. மற்ற மாகாணங்களிலும் விரைவில் இப்படிப்பட்ட மாறுதல்கள் ஏற்படக் கூடுமென்று நம்பப்படுகிறது. ஆனால் இந்த ஏற்பாடுகளில் பிரிட்டிஷ் சர்க்காரின் மனப்பான்மை நமக்குத் தெளிவாய் விளங்கவேண்டும். 'யுத்த அபாயம்" இனியில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டவுடன், பிரிட்டிஷ் சர்க்கார் இவ்வளவு நன்றிகெட்டத் தனமாய் காங்கரஸ் ஆட்சிக்கு—அதிலும் பிரதிநிதித்துவ மந்திரி சபை என்பதற்குக்கூட இடமில்லாமல், உதவி செய்யப் போகிறார்களா? என்பதை பிற இந்திய அரசியல் கட்சிகள் எதிர்பார்த்து வருவதே போல், நாமும் கவனித்து வருகிறோம். ஆனால், சர்க்காருக்கு இதசம்மந்தமாக ஒரே ஒரு "எச்சரிக்கை"யை மட்டும் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்மைப் பொருத்தமட்டில் நிலைமைகள் எப்படியாயினும் லாபமென்றே நான் கருதுகிறேனானபடியால், இவைகளைப் பற்றிக் கவலைப்படுதல் அனாவசியம் என்றும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அன்று இருந்த ஆச்சாரியார் மந்திரிசபையில் நமக்கேற்பட்ட "இன எழுச்சி" மீண்டும் பன்மடங்காகவே நமக்கு ஏற்பட செய்யும். இப்போது நம்மைவிட்டுப் பிரிந்து நிற்றிருப்பவர்களைக்கூட நம்மிடம் வந்து ஒன்றுபடச் செய்யும். 1938-ம் ஆண்டு இதே சென்னையில் நடந்த மாகாண மாநாட்டிற்கு தலைவராக பெரியார் அவர்கள் தேர்தெடுத்த அவசியம் சீக்கிரமே இன்றும் உணரப்பட்டுவிடும். ஆச்சாரியார் ஆல் ஏதோ காங்கரஸ் மந்திரி சபை சென்னையில் ஏற்பட்டுவிட்டதென்றால், நமக்குள் தலைகாட்டியுள்ள சிறு புகைச்சலும் ஒழிந்து நம்மை ஒற்றுமைப்படுத்திவிட்டதாகவே நிச்சயம் இருக்கும் என்று நம்புகிறேன்."

பின், மறைந்த தோழர்கள் தாலமுத்து, நடராசன் ஆகியவர்கள் தமிழ் மொழிக்காகவும் திராவிடர்கள் வாழ்வுக்காகவும் உயிர் துறந்ததை விளக்கி விருதுநகர் தோழர் வே. வி. பி. ஆசைத்தம்பி ஓர் சொற்பொழிவாற்றினார்.

இத்துடன் மாநாடு பகல் சாப்பாட்டுக்குக் கலைந்தது.

மாநாடு மீண்டும் பிற்பகல் கூடிற்று. பல தீர்மானங்கள் நிறைவேறின. (விபரம் பின்னர் வரும்)

## திருவாரூர் திராவிடர்கழகம்

### ஜெனரல்பாடிக்கூட்டம்

நாளை 12-4-45ந்தேதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு திருவாரூர் நாடார் விடுதியில் மேற்படி கழகத்தின் ஜெனரல்பாடிக் கூட்டம் நடைபெறும். இயக்க அன்பர்கள் அவசியம் இதை அழைப்பாக கொண்டுவரவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அது காலை முக்கியமான தீர்மானங்கள் ஆலோசிக்கவேண்டி இருக்கிறது என திருவாரூர் திராவிடர் கழகத்தார் அறிவிக்கின்றனர்.

## தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் டாக்டர் அம்பேத்காரின் 53-வது பிறந்த நாள் விழா 13-4-45-ந்தேதி தோழர் [illegible] ஆண்டி அவர்கள் தலைமையில் கொண்டாடப்படும்.

## எங்கள் புது வருஷ நற்செய்தியும் நல்வரவும்

மேனகா சிலேட்டுகள் கைதேர்ந்த திராவிடத் தொழிலாளர்களால் செய்யப்பட்டவை. உறுதியிலும் உபயோகத்திலும் பேனட்டு சிலேட்டுகளை தோற்கடிப்பவை.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்

மேனகா சுதேசி சிலேட் பாக்டரி,

Prop. G சண்முகம்,

பெரிய கடைத்தெரு, கும்பகோணம்.


# செல்வம் நாள்

குனியமுத்தூர் திராவிடர் கழகத்தாரால் தோழர் கே. ஏ. பழனியப்பன் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் கே. ராமசாமி, எம். கருப்பண்ணன், எஸ். மாரியப்பன், கே. வி. ராமசாமி, ஆர். கருப்பண்ணன் முதலியவர்கள் பேசினார்கள்.

o o

11-3-45 ஞாயிறு மாலை 7-மணிக்கு கடலூர் பழைய பட்டினம், பழைய வீரபத்திரசாமி கோவில் தெருவில் தோழர் பெருமாள் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் செல்வம் நினைவு நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கோபால், சானகிராமன், பகுத்தறிவுப் பாடல் பாடினர். தோழர்கள் எஸ். தவமணிராசன், இளவழகன், வீரமணி, "தொழிலாளர் மித்திரன்" ஆசிரியர் கா. கலியாணசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். ஆ. திராவிடமணியவர்கள் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

o o

12-3-45 திங்கள் மாலை 7 மணிக்கு பண்ணுருட்டி—புதுப்பேட்டையில் "தொழிலாளர் மித்திரன்" ஆசிரியர் கா. கலியாணசுந்தரம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆ. திராவிடமணி, வீரமணி, தவமணிராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றி செல்வம் நினைவு நாள் கொண்டாடப்பெற்றது.

* *

13-3-45 செவ்வாய் மாலை 7 மணிக்கு திருப்பாதிரிப்புலியூர் போடிசெட்டித் தெருவில் மா. பீட்டர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆ. திராவிடமணி, இளவழகன், ஆனந்தன், தவமணிராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றி செல்வம் நினைவு நாள் கொண்டாடப்பெற்றது.

* *

திருச்செங்கோடு திராவிடர் கழகத்தின் சார்பில் 12-3-45 தோழர் கூ. அ. அண்ணாமலை அவர்கள் தலைமையில் செல்வம் நினைவு நாள் கொண்டாடப்பட்டது. தோழர்கள் சி. பி. சின்னராஜு, எஸ். கே. வரதராஜு, கே. என். வி. வேல் முதலியவர்கள் பேசினார்கள்.

* *

நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் கிராமம் கருங்குளத்திலிருக்கும் பெரியார் புத்துணர்ச்சி இளைஞர் கழகத்தில் 1-3-45-ந் தேதி செல்வம் நினைவு நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

* *

சென்னை, வில்லிவாக்கம் சர் செல்வம் ஞாபகார்த்த சங்கத்தின் ஆதரவில் 18-3-45-ந் தேதி தோழர் என். வி. நடராசன் தலைமையில் சர் செல்வம் நாள் கொண்டாடப்பட்டது. தோழர்கள் என். ஜீவரத்தினம், டபுள்யு. பி. துரைசாமி ஆகியவர்கள் பேசினார்கள்.

திருச்சி ஹரிஜன ஹாஸ்டல் அதிகாரியின் அக்கிரமச் செயலைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின் என். அமிர்தலாசகம் வணக்கம் கூறினார்.

* *

17-3-45 இரவு 7½ மணிக்கு பூவாளூர் திராவிடர் கழக ஆதரவில் நடந்த செல்வம் நினைவுக் கூட்டத்திற்கு தோழர் தி. அ. வீர. முத்து அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் டி. சி. வேதாசலம், சி. வீராசாமி, சீனிவாசன், சுப்ரமணியன் ஆகியோர் பேசினர். அன்று மாலை 5-3J முதல் 6 மணி வரை இளைஞர்களின் கடமை குறித்து தோழர் வேதாசலம் அறிவுறுத்தினார்.

o o

மணக்கால் திராவிடர் கழகத்தில் சர் ஏ. டி. பன்னீர்செல்வம் நினைவு நாள் 13-3-45ந் தேதி தோழர் ம. கி. சோமசுந்தரம் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் நம்மாழ்வார், எல். எஸ். ஆறுமுகம், வீராசாமி, சுந்தரகணேசன், கு. சுப்பிரமணியம், புலவர் சுப்பிரமணியம் முதலியவர்கள் பேசினார்கள்.

o o

கல்லாரப்பட்டி திராவிடர் கழகத்தில் 13-3-45ந் தேதி சிவநேசம் அடிகள் தலைமையில் ஷெ நாள் கொண்டாடப்பட்டது. தோழர் வீராசன், எஸ். பாலசுப்பிரமணியம் முதலியவர்கள் பேசினார்கள்.

o o

வொரநாடு திராவிடர் கழகத்தில் 18-3-45 அன்று மாலை 5 மணிக்கு சிதம்பரம் புலவர் மாணிக்கம் அவர்கள் தலைமையில் திராவிட மாணவர் கழக தொடக்க விழா நடைபெற்றது.

அத்துடன் வொரநாடு நகரப் போலீஸ் நிலையத்திற்குப் பின்புற மைதானத்தில் செல்வம் நினைவு நாள் கே. கிருட்டிணமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் புலவர் மாணிக்கம், கீரைப்பாளையம் சம்பந்தம், 12 வயது மாணவத் தோழர் வீரமணி முதலியவர்கள் முறையே 'பிரிவினை' 'திராவிடரும் செல்வமும்', 'திராவிட மாணவரின் கடமை' என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினார்கள்.

o o

சயங்கொண்டம்,

25-3-45 ஞாயிறு மாலை 7 மணிக்கு தோழர் பாலகுரன் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கடலூர் தோழர்கள் ஆ. திராவிடமணி பி. ஏ., இளவழகன், வீரமணி ஆகியோர் சர். செல்வம் தொண்டைப் பாராட்டிப் பேசினார்கள். இரவு 10 மணிக்கு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

# திராவிட நாட்டுச் செய்திகள்

சாத்தூர் வர்த்தக தொழிலாளர் சங்கம் 11-3-45 காலை திராவிடர் கழகக் கட்டிடத்தில் திராவிடர் தொண்டர் படைத் தலைவர் தோழர் பி. இராஜமணி அவர்கள் தலைமையின் கீழ் தோழர் பி. பால கிருஷ்ணன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். தோழர்கள் எ. அருணாசலம், சண்முக நாடார், சா. கருப்பையா முதலானவர்கள் நமது நாட்டு பிரச்சினை பற்றியும், தொழிலாளர் முன்னேற்றம் பற்றியும் பேசினார்கள்.

o o

கோவை மாவட்ட திருத்தவ சங்கத்தின் 5வது மாநாடு 28, 29-12-44ல் நடைபெற்றது. முதல்நாள் தோழர் எச். எ. பாப்லி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் எ. இம்மானுவேல்தாஸ் பி. டி. திறந்துவைத்தார். தோழர்கள் எ. ரஞ்சிதம், எஸ். மீனாட்சிசுந்தர முதலியார் பேசினார்கள். மறுநாள் தோழர் எ. டி. டாட்மன் பி. எ. தலைமையில் எ. ரத்னம் பேசினார். மாலை தீர்மானங்கள் நிறைவேறின. நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

செவ்வாய்ப்பேட்டை மருத்துவகுலசங்கத்தார் மேளம் வாசிப்பவர்களுக்குத் தாங்கள் வேலை செய்வதில்லை என முடிவு செய்துள்ளார்கள்.

o o

சென்னை ஆதிதிராவிட வாலிபர்சங்க இரண்டாவது முகாம்—டென்னிஸ் பந்தயப் பரிசளிப்பு விழா தோழர் வெங்கடேசன் தலைமையில் 31-12-44ல் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

தில்லைவட்டம் பின்னத்தூர் தோழர் எஸ். கோபால் கிருஷ்ணன் துணைவியாருக்குப் பிறந்த பெண் மகவுக்கு "மணி மொழி" எனப் பெயரிடப்பட்டது. 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

கரூர் தாலுகா தோட்டக்குறிச்சிக் கிராமம் தேவேந்திர குல வேளாளர் வாலிபர் சங்கக் கூட்டம் 15-3-45-ல் தோழர் சிவராமசாமி தலைமையில் நடைபெற்றது. நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

மாயவரம் மருத்துவர் சங்கக் கூட்டம் 13-3-45-ல் தோழர் ஜி. நாராயணசாமியவர்கள் தலைமையில் நடைபெற்றது. தாலுகா முதலாவது மருத்துவர் மாநாடு 12-4-45-ம் தேதியில் நடத்துவதென முடிவு செய்து வரவேற்புக் கமிட்டி அமைக்கப்பட்டது.

o o

மோகனூர் தேவேந்திர இளைஞர் சங்கக் கூட்டம் 14-3-45-ல் தோழர் எம். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

o o

நாங்கை வாலிபர் முன்னேற்றக் கழகத் திறப்பு விழா தோழர் வி. கனகசபை நாடார் அவர்களால் நாகை உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் தோழர் டி. வி. சொக்கப்பா அவர்களால் இனிது நடந்தது. திறப்புவிழாவிற்குப் பின் தோழர் ரெத்தினசாமி நாடார் அவர்கள் உருவப் படத்தை தோழர் டி. சாமுவேல் அவர்களும், மாணவர் அறிவு நிலையத்தைத் தோழர் கோபால்சாமி நாடார் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் டி. வி. சொக்கப்பா எம். ஏ., எல். டி., புலவர் கா. மு. மாணிக்கம், மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

13-3-45-ல் பாபனாசம் வித்யா பாடசாலையில் தோழர் பாலகிருஷ்ணன் தலைமையில் தாலுகா மருத்துவர் சங்க தொடக்கவிழா நடைபெற்றது. தோழர் வெற்பாசன் திறப்புவிழா சொற்பொழிவாற்றினார். தோழர்கள் தேவதாஸ், அரங்கசாமி தம்பையா ஆகியோர் பேசினர். நிர்வாகக்கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

ஈரோடு அனாதை மாணவர் ஹாஸ்டல் 3-வது ஆண்டுவிழா 11-3-45ல் தோழர் ஆர். வி. என். நாயுடு கொய்லண்டு அம்மையின் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சென்னப்பச் செட்டியார், பி. எஸ். எச். அப்துல் மஜீத், எஸ். ராமகிருஷ்ணன், எச். எ. பாப்ளி, கே. அருணகுமாரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

கூடலூர் எம். டி. நகர மருத்துவர் சங்க ஸ்தாபக ஆலோசனைக் கூட்டம் 13-3-45-ல் தோழர் முனுசாமி ரெட்டியார் ஒர்க்ஷாப்பில் தோழர் தி. கி. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வீ. மா. முத்து, சொ. இராஜமாணிக்கம், பி. ஜம்புலிங்கம், ம. வ. பாலகிருஷ்ணன் ஆகியோர் சங்கத்தின் அவசியத்தைக் குறித்துப் பேசினார்கள். தோழர் சண்முகம் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

o o

தருமபுரி மருத்துவகுல சங்க நிர்வாகக் கமிட்டி தேர்தல் 13-3-45-ல் தோழர் எஸ். வி. நாகப்பண்டிதர் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

சிதம்பரம் விசுவகர்ம வளர்ச்சிக் கழகக் கூட்டம் 13-3-45-ல் தோழர் க. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

o o

17-3-45-ல் தஞ்சைத் தாலுகா நாகத்தி என்னும் கிராமத்தில் தோழர் திராவிட மணியின் தலைமையில் தாழ்த்தப்பட்டோர் இளைஞர் கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர்கள் ஜகநாத், மனுவேல், வடிவேல், பிச்சையா முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

24-2-45-ல் ஒட்டக்குடி கிராமத்தில் "திராவிட நாடு காகிதத் தொழிற்சாலை" தோழர் ஐயப்பெருமாள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. தோழர் எல். எஸ். ஆறுமுகம் ஆரம்பித்துவைத்தார். தோழர்கள் ஜெகநாதன், கனகசபாபதி ஆகியோர் பேசினர்.

* *

செங்கம் தாலுகா ஆலப்புத்தூரில் 2-3-45ல் "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்னும் நாடகம் நடைபெற்றது.

* *

சிங்காநல்லூர், ஆதிதிராவிட வாலிப சங்கக்கூட்டம் 25-2-45ல் தோழர் எஸ். பி. முத்தையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். பி. பழனிச்சாமி, எஸ். எஸ். பரமேஸ்வரன் ஆகியோர் பேசினார்கள்.

* *

வீரபாண்டியாபுரம் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் 22-3-45ல் தோழர் குசை மாணிக்கம் தலைமையில் நிறைவேற்றது. தோழர் எஸ். எம். செல்லையா பேசினார்.

* *

கோவையில் 'சிட்டி' முஸ்லிம் லீகினரால் 25-3-45ந் தேதி டவுன்ஹால் மைதானத்தில் பாக்கிஸ்தான் தினக் கொண்டாட்டம் நடைபெற்றது.

* *

ஈரோடு மதரஸா இஸ்லாமியாவிலே அல்ஹாஜ் கான்சாஹிப் ஈ. கே. முஹம்மத் மீரா சாயபு அவர்களின் தலைமையின் கீழ் மஜ்ஹருல் இஸ்லாம் சங்கத்தின் சார்பாக 11-3-45-ந் தேதி மீலாதுன் நபி விழா நடைபெற்றது. தோழர்கள் திருச்சி கே. எ. பி. விசுவநாதம், திருப்பூர் எ. எம். மொய்தீன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு மேற்படி சங்கக் காரியதரிசியால் உபசாரம் கூறிய பிறகு கூட்டம் கலைந்தது.

* *

சீரங்கத்தில் 24-2-45ல் நடந்த மருத்துவர் கூட்டத்தில் லைசென்ஸ் விதிகளை மாற்றுதற்கு முனிசிபல் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டும், மேளகாரர்கள் தம்

கள் காரியங்களுக்கு வராவிட்டால் அவர்களுக்குத் தொழில் செய்வதில்லை என நோட்டீஸ் கொடுக்கவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

28-2-45-ல் திருச்சி மாவட்ட சோழமாதேவி லேபர் பாட்சாலை பெற்றோர் விழா தோழர் D. T. ராஜன் அவர்கள் தலைமையில் நடந்தது. அது சமயம் செடியூல்டு வகுப்புச் சங்கமொன்று நிறுவப்பட்டது.

* *

சென்னை ஜியார்ஜ் டவுன் தாழ்த்தப்பட்டோர் சங்க 25-2-45-ந் தேதி கூட்டத்தில் தோழர்கள் வி. எம். முனுசாமி பிள்ளை, எஸ். ஆரோக்கியசாமி ஆகியோர் மறைவு குறித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

சிப்ளாப்புத்தூர் முத்துராஜ மகாஜன சங்கக் கூட்டம் 27-2-45-ல் தோழர் பரமசிவம் தலைமையில் நடைபெற்றது. பலர் சொற்பொழிவாற்றினர்.

* *

திருப்பத்தூர் சுயமரியாதைச் சங்கக் கூட்டம் 6-1-45-ல் டாக்டர் எ. சண்முகசுந்திரம் அவர்கள் தலைமையில் கூடிற்று. பலர் சொற்பொழிவு ஆற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

சென்னைமாவட்ட தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் கூட்டமொன்று 7-1-45-ல் வண்ணாரப்பேட்டையில் தோழர் ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றது. பலர் பேசிய பின் டாக்டர் அம்பத்கரரைக் குறைகூறும் தோழர்கள் ஜே. சிவசண்முகம் பிள்ளை, வி. டி. முனுசாமி பிள்ளை, சாமி சகஜானந்தா ஆகியோரைக் கண்டித்தும் டாக்டர் அம்பேத்காரைத் தங்களது தலைவர் என்று ஆதரித்தும் தாங்கள் இந்துக்கள் அல்லவென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

சென்னையில் நவீன அறிவு வளர்ச்சிக் கழகம் 31-12-44ல் உயிர்க்கவி பாரதிதாசனால் திறந்துவைக்கப்பட்டது. தமிழ் இசை இயக்கத்தின் நோக்கம், வேர் முதல் உச்சிவரை சுத்தத் தவறானது என்று புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் அக்கழகத்தை 31-12-44ல் திறந்துவைக்கையில் பேசினார்.

* *

கவிநாயகம் முகமத் அவர்கள் ஜனனத் திருவிழா விருதுநகரில் சிவகாசி சப் கலெக்டர் ஆலிஜனாப் எம். எஸ். ஹமீது சாஹிப் பகதூர் அவர்கள் பி. ஏ. தலைமையில் 26-2-45ல் நடைபெற்றது. ஜனாப்கள் எம். கே. எம். காதிரு முகைதீன் மரைக்காயர், எஸ். லப்பை இஸ்மாயில் சாஹிப், வி. எம். எம். அப்துல் மஜீத், வி. எம். எம். அப்துல் ஜப்பார் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

17-2-45-ல் தோழர் பி. எஸ். மணியவர்கள் தலைமையில் திருவெற்றியூர் ஆதிதிராவிட பொதுநலக் கழகக் கூட்டம் கூடிற்று. அதன் பெயரை ஷெடியூல்டு வகுப்பு பெடரேஷன் என மாற்றப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* *

14-1-45-ல் கூடிய மதுரை, ஆதிதிராவிடர் சங்கக் கூட்டத்தில் ஆதிதிராவிடர் சங்க மென்றிருப்பதை செடியூல் வகுப்பு பெடரேஷன் எனப் பெயர் மாற்றவும் 5-வது ஆண்டு விழாவை எப்ரல் மாதம் நடத்தவும், தோழர் சண்முகவேலு ராஜன் மறைவு குறித்து வருந்துவதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின.

* *

16-2-45ல் திருப்பத்தூர் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் மாணவர் கழக சார்பாக தோழர் லா. சி. சுப்பிரமணிய செட்டியார் தலைமையில் நடந்த கூட்டத்தில் பல மாணவர்கள் "நம்நாட்டு பழங்குடி மக்கள்" என்ற தலைப்பில் பேசுகையில் "நாம் திராவிடர்" "நம்நாடு திராவிடநாடு" "நம் பழங்குடி திராவிடம்" என விளக்கிப்பேசினர். தலைவர் தம் முடிவுரையில் "நாம் இந்துக்கள்" என்று பேசவே கலவரம் ஏற்பட்டது.

* *

சேலம், கோவை, நீலகிரி ஜில்லாக்களின் கொங்கு தாழ்த்தப்பட்டோர் சங்கம் 24-2-45-ல் தோழர் சுந்தரசாமி செட்டியார் தலைமையில் தொடக்கப்பட்டது. தோழர்கள் கே. பி. சங்கமேஸ்வரன் செட்டியார், ரெவரண்டு ஜே. தேவசகாயம் பி. ஏ. ஆகியோர் பேசிய பின் நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

* *

18-3-45-ல் பம்பாய் தெ. இ. ஆ. தி. காலனிக் கழக நிர்வாக சபையின் கூட்டம் தோழர் வி. எஸ். டி. ராஜா தலைமையில் நடைபெற்றது.

தோழர் வி. வி முருகேசன் தலைமையில் 27-5-45-ல் கழக ஆண்டுவிழாவை நடத்த முடிவு செய்யப்பட்டது. தோழர் ஏ. பி. ஜே. ராஜ் அவர்களின் தாயார் மறைந்தது குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது.

o o

தூத்துக்குடி ஆ. தி. ஐக்ய சங்கத்தின் கூட்டம் 27-3-45ல் தோழர் எம். ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

திருநெல்வேலி மந்திரமூர்த்தி பள்ளி ஆசிரியர்கள் டி. ஆர். பெரியநாயகம், ஆ. முத்துகிருஷ்ணன் ஆகியோர் வேறு வேலைகளுக்குச் செல்வதால் அவர்களுக்கு ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் 22-3-45ல் பிரிவு உபசாரம் நடத்தப்பட்டது. தோழர் முத்துகிருஷ்ணன் அவர்களுக்கு ஆசிரியர்களால் ஒரு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

o o

பம்பாய் தாராவி, திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் கூட்டம் 25-3-45ல் தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். பி. சுந்தரவேல் சொற்பொழிவாற்றினார்.

o o

திருச்சி உறையூர் மருத்துவர் குல சங்க முதலாவது ஆண்டுவிழா 31-3-45ந் தேதி நாச்சியார் கோவிலில் தோழர் திருச்சி டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. குடந்தை டாக்டர் ஆர். பாலகிருஷ்ணன் தமிழ் கொடியை உயர்த்தினார். திருச்சி டாக்டர் அ. பிச்சைமுத்து விழாவை ஆரம்பித்து வைத்தார். பண்டிட் எல். எஸ். ஆனந்தம் படத்தை மண்ணச்சநல்லூர் தோழர் மாணிக்கம் திறந்துவைத்தார்.

* *

லீஸ்ரெட்டிப் பாளையத்தில் 30-3-45-ந் தேதி நடந்த தீமிதி உற்சவத்திற்கு திராவிட இளைஞர் கழகத்தார் சென்று தீ மிதிப்பது கடவுள் வழிபாடு இல்லையென்று அதன் புரட்டுகளை விளக்கி கழகத் தலைவர் உட்பட 7 அங்கத்தினர்கள் தீ மிதித்து மெய்ப்பித்துக் காட்டினார்கள்.

* *

பிடாரமங்கல கிராமத்தில் காட்டுப்புத்தூர் தோழர் கே. பி. காத்தமுத்து தலைமையில் 27-3-45-ந் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ஓ. குப்பமுத்து, கே. மாரிமுத்து, கே. பி. வேம்படி முதலியவர்கள் பேசினார்கள். அவ்வூரில் ஒரு சங்கம் விரைவில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது.

## விற்பனைக்கு

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5—0—0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை